# திறந்தவெளி கழிப்பிடம் இல்லாத இந்தியாவை உருவாக்க, பாரத பிரதமருக்கு கிராமாலயா நிறுவனர் எஸ்.தாமோதரன் அவர்கள் எழுதிய கடிதத்தின் தமிழாக்கம்

பாரதப் பிரதமர் மாண்புமிகு திரு. நரேந்திர தாமோதரதாஸ் மோடி அவர்களுக்கு,

தங்களின் மகத்தான வெற்றிக்கும் பதினைந்தாவது பாரதப் பிரதமராகிய தங்களுக்கும் எங்களது கிராமாலயா நிறுவனத்தின் சார்பில் மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடு இந்தியா! எல்லா இயற்கை வளங்களும் நிறைந்த, பாரம்பரியமும் பண்பாடும் மிக்க, கலாச்சாரத்திற்கும் விருந்தோம்பலுக்கும் பெயர் பெற்ற நாடு நம் இந்தியா! கோவில்களுக்கும், சிற்பங்களுக்கும், கட்டிடக்கலைக்கும் எடுத்துக்காட்டாகவும், இயற்கை மருத்துவத்தை அறிமுகம் செய்த நாடும் இந்தியா! உலகில் முதன் முதலில் நாகரீகம் தோன்றிய நாடு, ஆன்மீகத்திற்கும் தொண்மைக்கும் பெருமையுள்ள நாடு இந்தியா! நீங்கள் கூறியதுபோல் உலகிலேயே ஆறு பருவகாலங்கள் உள்ள நாடு இந்தியா! உலகிலேயே அதிக இளைஞர்களைக் கொண்ட நாடு இந்தியா! சந்திரனுக்கும், செவ்வாய்க்கும் செயற்கைக் கோள்களை அனுப்பி ஆராய்ச்சி செய்து வரும் பெருமை மிக்க நாடு, அதி நவீன ஏவுகணைகளை உருவாக்கி பெருமைப்படும் நாடு, மிக வேகமாக எல்லாத் துறைகளிலும் வளர்ந்துவரும் நாடு இந்தியா! விரைவில் வல்லரசு நாடுகளின் பட்டியலில் இடம் பிடிக்கவிருக்கும் நாடு நம் இந்தியா!

மேற்கூறிய இந்த பெருமைகள் எல்லாம், நமக்கும், நமது அண்டை நாடுகளுக்கும் தெரியும். இவை எல்லாவற்றையும் நினைத்துப் பார்க்கும்பொழுது இந்தியன் ஆன எனக்கும் பெருமைதான். ஆனால், 120 கோடி மக்களும் நமது எல்லா பெருமைகளையும் ஓரம் கட்டச்செய்துவிட்டு, வெட்கித் தலைகுனிந்து நிற்கும் ஒரு செயல், வெளிநாட்டினர்கள் மிகவும் அருவெறுப்பாகப் பார்க்கும் ஒரு செயல் இங்கு உண்டு. அது நமது உடல் நலத்தையும், சுற்றுச்சூழலையும், பெண்களின் பெருமையையும், மானத்தையும், கவுரவம் மற்றும் ஆரோக்கியத்தையும் பாதிக்கும் செயல். ஐந்து லட்சம் குழந்தைகளுக்கும் அதிகமானோர் வருடந்தோறும் உயிரிழப்பதற்கு காரணமாக இருப்பதுவும், நீர்நிலைகள், நிலம், காற்று மற்றும் சுற்றுச்சூழல் மாசுபடுவதற்கு மிக முக்கியமான காரணங்களில் ஒன்றாகவும், நமது குழந்தைகள், பெரியவர்கள் உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனைகளில் அதிகம் சேருவதற்கு முக்கியக் காரணங்களில் இதுவும் ஒன்று. விலைமதிக்க முடியாத மனித வேலைநாட்களை இழப்பதற்கும், பொருளாதார பின்னடைவிற்கும் காரணமான ஒன்றும், இன்னும் ஐம்பது ஆண்டுகளாயினும் இலக்கினை அடைய முடியாதவொன்றும், நம் நாட்டிலுள்ள ஒவ்வொரு மாநிலமும் அடைய முடியாத ஒன்றும் இதுவாகும். நம் நாட்டிலுள்ள ஒவ்வொரு வீட்டிற்கும், ஒவ்வொரு குடிமகனுக்கும் அவசியமான ஒன்றும், வயதான, நோய்வாய்ப்பட்டு துன்புறும் முதியோர்களுக்கும், இளம் வயது பெண்களுக்கும், கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் மிகவும் அத்தியாவசியமான ஒன்று. ஐம்பது வருடத்திற்கும் மேலாக நமது இந்திய அரசாங்கத்தின் கருவூலத்தில் பாதிப்பை ஏற்படுத்துவதும், அரசுத்துறைகள், மிகப்பெரிய வல்லுநர்கள், அரசு அதிகாரிகள், தொண்டு நிறுவனங்கள் ஈடுபாடு கொண்டும் நம்மால் முடியாத காரியங்களில் ஒன்று. அதுவே 70 கோடிகளுக்கும் அதிகமான நம் இந்தியர்கள் திறந்தவெளியில் மலம் கழிக்கும் இழிவான செயல்.

வீட்டில் போதிய சுகாதாரக் கழிப்பறை வசதிகள் இல்லாததால் சுற்றுச்சூழல் மாசுபாடு மற்றும் பல்வேறு அசௌகரியங்களுக்கும் காரணமாகவிருப்பதும், உலகிலேயே அதிக மக்கள் திறந்தவெளியில் மலம் கழிக்கும் நாட்டிற்கு தலைநகரம் இந்தியா என்ற அவப்பெயருக்கு தள்ளப்பட்டுள்ள நாடு!

நம் அண்டை நாட்டுடன் எல்லைப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசும் பொழுது, அவர்கள் ஏளனமாக கூறுவது, முதலில் உங்கள் கழிப்பறைப் பிரச்சினையைத் தீர்த்துவிட்டு எங்கள் பிரச்சினைக்கு வாருங்கள் என பேசுவது. இன்னும் 100 ஆண்டுகள் ஆனாலும் நம்மால் முடியாதோ என்ற சந்தேகத்தினை வரவழைப்பது, நம்மை விட பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள நாடுகள், ஏழ்மையான நாடுகள், சிறிய நாடுகள் இந்த விசயத்தில் மிகவும் முன்னேற்றம் அடைந்திருப்பது, இவைகள் எல்லாம் இந்தியக் குடிமகன் என சொல்வதற்கும், தமிழன் என்று பெருமைப்பட்டுக் கொள்வதற்கும் முட்டுக்கட்டையாக இருப்பது இந்த திறந்தவெளியில் மலம் கழிக்கும் அவலமான நிலை. இந்தப் பிரச்சினையை நமது அரசு தலையாயப் பிரச்சினையாக எடுத்துக்கொண்டு, முனைப்புடன் செயல்படுத்த வேண்டும் என்ற வேண்டுகோளுடன் இந்தக் கடிதத்தை உங்களுக்கு எழுதுகின்றேன்.

கிராமங்கள் எல்லாம் ஆலயங்களாக மாற வேண்டும் என்ற நோக்குடன், கிராமாலயா என்ற தொண்டு நிறுவனத்தை 1987ஆம் ஆண்டு துவங்கி, கடந்த 25 வருடங்களுக்கும் மேலாக தனிநபர் வீடுகளுக்குக் கழிப்பறைக்கட்டும் திட்டத்தை செயல்படுத்தி வருகின்றோம். இதற்கு முன் நான் அந்தியோதயா என்ற சமூக சேவை நிறுவனத்தில் பணிபுரிந்த போது, 1984ஆம் வருடம் முதன் முதலில் ஆந்திராவில், தமிழ்நாடு, கர்நாடகா எல்லைகளுக்கருகில், குப்பம் என்ற கிராமத்தில் கட்டிய கழிப்பறையே நான் முதன் முதல் கட்டிய கழிப்பறையாகும். முப்பது ஆண்டுகளுக்கு மேலாகியும் இந்தப் பணி இன்னும் நிறைவு பெறவில்லை என்பது வருந்தத்தக்க ஒன்றாகும். மத்திய, மாநில அரசு மற்றும் யுனிசெப் போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் உதவியோடு கால் நூற்றாண்டுகளுக்கும் மேலாக சுகாதாரத் திட்டத்தினை வெற்றிகரமாக செயல்படுத்தி வருகின்றோம். திறந்த வெளியில் மலம் கழிக்கத் தடைசெய்யப்பட்ட இந்தியாவின் முதல் கிராமத்தை கிராமாலயா நிறுவனம் கிராம ஊராட்சியின் ஒத்துழைப்போடு 2003ஆம் ஆண்டு ஆராய்ச்சி ஊராட்சி, தாண்டவம்பட்டி கிராமத்தை அறிவித்தது.

இந்தியாவில் திறந்த வெளியில் மலம் கழிக்கத் தடைசெய்யப்பட்ட முதல் நகர்ப்புற குடிசைப்பகுதியை திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் கல்மந்தைக் குடிசைப் பகுதியை கிராமாலயா நிறுவனம் 2002ஆம் ஆண்டு மாநகராட்சியின் ஒத்துழைப்போடு அறிவித்தது. முதன் முதலில் இந்தியாவில் குழந்தைகள் நேயக் கழிப்பறைகளை கிராமாலயா நிறுவனம் உருவாக்கி குழந்தைகள் பயன்படுத்தச் செய்தது. கிராமங்களுக்கும், நகர்ப்புறங்களுக்கும் பொருளாதாரத்திற்கு ஏற்ற, நில அமைப்புக்கேற்ற மக்கள் விரும்பி பயன்படுத்தக் கூடிய பல்வேறு கழிப்பறை மாதிரிகளை உருவாக்கி கழிப்பறைப் பூங்கா மற்றும் பயிற்சி மையத்தை முதன் முதலில் உருவாக்கியது கிராமாலயா. இந்தியாவின் பல்வேறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அரசு அதிகாரிகள், தொண்டு நிறுவனங்கள், ஆராய்ச்சி மாணவர்கள் மேற்கூறிய திட்டத்தினை கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாகப் பார்வையிட்டு தங்கள் பகுதிகளில் இதைப் போன்ற திட்டங்களை செயல்படுத்த முன் மாதிரியாக எடுத்துக் கொள்கின்றனர்.

இந்தியாவில் முதன் முதலில் கழிப்பறைக் கட்டுவதற்கு வீட்டுக்கு வீடு சுலபத் தவணையில் கடனுதவி சுய உதவிக்குழுக்களுக்குக் கொடுத்து அதை வெற்றிகரமாக செயல்படுத்தி 50,000க்கும் அதிகமான வீடுகளில் கழிப்பறை வசதியை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம். தற்பொழுது இந்தத் திட்டத்தினை முன்மாதிரியாக எடுத்துக் கொண்டு நமது பல்வேறு மாநிலங்களில் தொண்டு நிறுவனங்கள் செயல்படுத்தி வருகின்றன. இதுவரையில் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான வீட்டுக்கழிப்பறைகளைக் கட்டிப் பயன்படுத்துவதற்கு கிராமாலயா நிறுவனம் உதவியுள்ளது.

மேற்கூறிய எங்களது வெற்றிகரமானத்திட்டங்களுக்காக, மாநில அரசும், மத்திய அரசும் பல்வேறு பாராட்டுச் சான்றிதழ்கள், விருதுகள் வழங்கி எங்களின் சுகாதாரத்திட்டத்தினையும், பணிகளையும் அங்கீகாரம் செய்துள்ளது. மேற்கூறியத் திட்டங்களை கிராமப்புறங்கள், நகர்ப்புறங்கள், சுனாமிப் பாதித்தக் கடலோரக் கிராமங்கள் மற்றும் மலைவாழ் மக்கள் வாழும் கிராமங்களில் செயல்படுத்தியிருக்கின்றோம். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் தமிழ்நாட்டில் 1989ஆம் ஆண்டுகளில் ராசிபுரம் மற்றும் திருச்செங்கோடு நகராட்சிப் பகுதிகளில் நாங்கள் கட்டிக் கொடுத்தக் கழிப்பறைகள் இன்றும் மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

இருபது ஆண்டுகளுக்கும் மேலாக தொட்டியம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் கிராமாலயா நிறுவனத்தின் உதவியுடன் கட்டி முடிக்கப்பட்டக் கழிப்பறைகள் இன்றும் பயன்பாட்டிலும், பராமரிப்பிலும் உள்ளன. பதினைந்து வருடங்களுக்கும் மேலாக திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் கட்டப்பட்டக் பொதுக்கழிப்பிடங்களையும் குழந்தைகள் நேயக் கழிப்பிடங்களையும் பெண்கள் சுயஉதவிக்குழுக்கள் பராமரிப்புச்செய்வதன் மூலம் மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். மேற்கூறியப் பணிகளை அங்கீகரித்து மத்திய அரசின் குடிநீர் மற்றும் சுகாதார அமைச்சகம், கிராமாலயா நிறுவனத்தை தென்னிந்தியாவில் தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் ஆந்திரா ஆகிய மூன்று மாநிலங்களில் பணிபுரியும் அரசு அதிகாரிகளுக்கும், தொண்டு நிறுவனங்களுக்கும் கழிப்பறைத் தொழில் நுட்பம் மற்றும் குடிநீர் ஆகிய துறைகளில் பயிற்சி கொடுக்கும் நிறுவனமாகத் தேர்ந்தெடுத்து அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சியளித்து, பள்ளிக் குழந்தைகளுக்கு சுகாதாரக் கல்வி மூலம் வீட்டுக்கு வீடு கழிப்பறைக் கட்டும் திட்டத்தினை செயல்படுத்திவருகின்றோம். ஒரு அரசு அதிகாரி என்னைப் பார்த்தவுடன் “என்ன ஐயா இருபது வருடமாக நீங்கள் கழிப்பறைக் கட்டும் திட்டத்தினைதான் செயல்படுத்தி வருகின்றீர்களா? இன்னும் எவ்வளவு காலத்திற்குக் கழிப்பறைகள் கட்டிக்கொடுத்துக் கொண்டிருப்பீர்கள்” என கேட்ட போது, அது எனது சிந்தனையைத் தூண்டியது. ஆகவே தான் இந்தக் கடிதத்தை தங்களுக்கு எழுதத் தோன்றியது. நமது அரசு பல்வேறுத் துறைகளின் ஒத்துழைப்போடு தகுந்த உத்திகளோடு செயல்பட்டால், இந்தப் பிரச்சினையை நாம் தீர்த்துவிட முடியும். வரும் 2025ஆம் ஆண்டுக்குள் இந்தப் பிரச்சினைக்கு நாம் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். அதற்காக நாம் அனைவரும் கடுமையாக உழைக்க வேண்டும்.

நம் நாட்டில் 90 கோடிக்கும் அதிகமானோர் செல்போன் பயன்படுத்துகின்றனர். 70 கோடிக்கும் அதிகமானோர் தொலைக்காட்சிப்பெட்டி வைத்துள்ளனர். 50 கோடிக்கும் அதிகம் பேர் இருசக்கர வாகனங்கள் வைத்துள்ளனர். ஆனால் 40% . மக்களுக்கு மட்டுமே கழிப்பறை வசதி உள்ளது. இதில் 20% மட்டுமே கழிப்பறையை பயன்படுத்துகின்றனர். செல்போனுக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் கழிப்பறைக்கு இல்லை. தாங்கள் கூட மக்களவைத் தேர்தலுக்கு முன், “இந்தியாவில் கோவில்கள் கட்டுவதை விட கழிப்பறைகளைக் கட்டுவதே நல்லது” என்று கூறியிருக்கின்றீர்கள். உங்களது 10 அம்ச திட்டத்தில் கல்வி, சுகாதாரம், குடிநீர் ஆகியவைகளுக்கு முக்கியத்துவம் தந்துள்ளீர்கள். நம்மை விட ஏழை மற்றும் சிறிய நாடுகளான பங்களாதேஷ் மற்றும் வியட்நாம் போன்ற நாடுகள் மிக வேகமாக கழிப்பறைத் திட்டத்தை செயல்படுத்தி இந்தியாவை பின்னுக்குத் தள்ளியுள்ளன. திறந்தவெளியில் மக்கள் இன்னும் மலம்கழிக்கக் காரணம் அறியாமை, வறுமை, இயலாமை, கழிப்பறையின் முக்கியத்துவம் அறிந்திருந்தும் தொழில் நுட்பம் தெரியாமை, யாரை எங்கு, எப்படி அணுகுவது என்பன புரியாமை. இவற்றுக்கெல்லாம் நமது அரசு முக்கியத்துவம் தந்து, நாட்டில் கழிப்பறை உள்ள வீடுகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். கழிப்பறை பயன்படுத்துவோரின் எண்ணிக்கையையும் அதிகப்படுத்த வேண்டும். இதன் மூலம் திறந்தவெளியில் மலம் கழிப்பவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும். இந்தியாவில் யாரும் திறந்தவெளியில் மலம் கழிப்பதில்லை என்ற நிலையை உருவாக்க வேண்டும்.

இந்தியாவில் இதுவரை 100 சதவீதம் கழிப்பறைகளைப் பயன்படுத்தும் ஒரே மாநிலமாக முதன் முதலில் சிக்கிம் மாநிலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அடுத்து கேரளா, இமாசலப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் முழு முயற்சி எடுத்து வருகின்றன.

தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டம், 97.5 சதவீதம் கழிப்பறை வசதி கொண்ட மாவட்டமாக இருந்தாலும், தமிழ்நாடு முழுசுகாதார மாநிலமாக மாறுவதற்கு எத்தனை வருடங்கள் ஆகும் என்று உறுதியாகச் சொல்ல முடியவில்லை சமீபத்திய கணக்கெடுப்பின்படி, ஒரிசா, மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான் ஆகிய 3 மாநிலங்கள் கழிப்பறை பயன்பாட்டில் மிகவும் பின்தங்கியுள்ளது. ஒரிசா மாநிலம் முழு சுகாதார மாநிலமாக அறிவிக்க வேண்டுமெனில் இன்னும் 160 வருடங்கள் ஆகும். அது போல் ராஜஸ்தான், பீகார், ஜார்கண்ட், உத்திரபிரதேசம், சதீஸ்கர், தமிழ்நாடு, மகாராஷ்டிரா, கர்நாடகா, ஜம்மு &

காஷ்மீர், குஜராத், அருணாச்சலப்பிரதேசம், ஆந்திரபிரதேசம் மற்றும் அஸ்ஸாம் ஆகிய மாநிலங்கள் அனைத்து வீடுகளுக்கும் கழிப்பறை வசதிகளை ஏற்படுத்தி, திறந்தவெளியில் மலம் கழிப்பதைத் தடுக்க இன்னும் 25 வருடங்களுக்கும் மேலாகும்.

இவையெல்லாம் சரியான திட்டமிடல், நிதி ஒதுக்கீடு, செயல்படுத்துதல் மற்றும் மக்களின் பங்கேற்பின் மூலமே சாத்தியம். இன்னும் எதிர்காலத்தில் மக்கள் தொகை அதிகரிக்கும், வீடுகளும் புதியதாகத் தோன்றும், நிதிச்சுமையும் அதிகரிக்கும்.

குழந்தைகளின் இறப்பு விகிதம் அதிகரிப்பதற்கும், குழந்தைகளின் வளர்ச்சி பாதிப்பிற்கும், பெண்களின் உடல்நலம் பாதிப்பதற்கும், வயிற்றுப்போக்கு நோய்கள், இளம்பிள்ளை வாதம், மஞ்சள் காமாலை, காலரா, டைபாய்டு போன்ற நோய்கள் தோன்றக் காரணமும் நாம் திறந்த வெளியில் மலம் கழிப்பதால் வருவதே. திறந்த வெளியில் மலம் கழிப்பதால் குழந்தைகளின் வளர்ச்சி குறைபாடு மற்றும் ஊட்டச் சத்து குறைபாடுள்ள குழந்தைகள் உருவாகக் காரணமாகின்றது. திறந்த வெளியில் மலம் கழிப்பதை அறவே தடுக்கவேண்டும். எல்லா வீடுகளிலும், பள்ளிகளிலும், பொது இடங்களிலும், பேருந்து நிலையங்கள், கோவில் பகுதிகள், மருத்துவமனைகள் மற்றும் சந்தைப் பகுதிகளிலும் கழிப்பறை வசதி ஏற்படுத்த வேண்டும். இதுவே தலை நிமிர்ந்த பெருமைமிக்க இந்தியனையும், இந்தியாவையும் உருவாக்கும் என தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனவே, பாரதப் பிரதமராகிய தாங்கள் அருள் கூர்ந்து திறந்தவெளியில் மலம் கழிக்காத இந்தியாவை உருவாக்க நமது அரசினை முழுமூச்சில் இறங்கச்செய்து, போர்க்கால அடிப்படையில் திட்டங்களைத் தீட்டி அனைத்து வீடுகளுக்கும் கழிப்பறை வசதியை ஏற்படுத்தித்தர செயல்பட வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

தங்கள் உண்மையுள்ள,

நாள் : 06.06.2014

இடம் : திருச்சிராப்பள்ளி



சே.தாமோதரன்

நிறுவனர், கிராமாலயா தொண்டு நிறுவனம்

திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு

(பாரதப் பிரதமருக்கு அனுப்பிய ஆங்கிலக்கடிதத்தின் தமிழாக்கம்)